RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1633

OPEN ACCESS

# நெய்தல் நிலமாந்தர்களின் வாழ்வியல் நிகழ்வுகள் (விடியலின் வெளிச்சம் நாவல் - வேளப்பாடு சிறுகதைத் தொகுப்பு)

**அ. ஆக்னஸ் அஜி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தெ.தி.இந்து கல்லூரி, நாகர்கோவில்-629002, தமிழ்நாடு, இந்தியா

# The Life Events of The Neithal People in the Collection of Short Stories 'Vidiyalin Veliccham (the Light of the Dawn)' and 'Velappaadu (Work Nature)'

**A. Agnus Aji** [a, *]

[a] Department of Tamil, S.T. Hindu College, Nagerocil-629002, Tamil Nadu, India

* Corresponding Author: ajaysudhan2011@gmail.com

Received: 30-06-2022
Revised: 01-09-2022
Accepted: 14-10-2022
Published: 15-12-2022

Check for updates

**ABSTRACT**

After reading J. Jacqueline Mary's book 'Emperors of Ocean are Fishermen' I got a clear idea about the life style of the Neithal land people and fishermen around Kanyakumari district. Two novels from folklore literature have been taken up for study. The novels were written by Neithal land writers and it is about the true incidents which they saw and experienced. The novels are Saptika's 'Vidiyalil Velicham' and Irayuman Sagar's 'Velapadu'. 'Vidiyalil Velicham' tells about the honorable marriages and its consequences 'Velapadu' depicts the superstitious beliefs, social ostracism, drug habits, about the irresponsibility of youths, youths who think their parents as burden, borrowing money and fulfilling their needs, beliefs about witchcraft, wrong directions given by police and lack of awareness about the law. Ten short stories in Irayuman's 'Velapadu' gives a clear note about the life events of Neithal land people.

**Keywords:** Vidiyalil Velicham, Velapadu, Belief, Social Ostracism.

## முன்னுரை

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக சமூகத்தில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பது நமக்குத் தெரிந்ததே. உலகம் தோன்றியது முதல் இன்றுவரை ஏற்பட்டுக் கொண்டிருக்கும் உலகியல் மாற்றங்களை வரலாற்று ஆய்வுகள் தெளிவாக எடுத்து இயம்பிக் கொண்டிருக்கின்றன. வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றான நாட்டுப்புறவியல் (Folklore) நாட்டுப்புற மக்களின் இலக்கியங்கள், கலைகள். கதைகள், பழக்கவழக்கங்கள், மருத்துவங்கள், நம்பிக்கைகள், விளையாட்டுகள் போன்ற பல்வேறு நாட்டுப்புற வழக்காறுகளை ஆராயும் சமூக அறிவியல் துறையாக சிறப்புற்று விளங்குகிறது. ஆய்வுகள் பெரும்பாலும் அறிவியில் மற்றும் மதிநுட்பத்தைச் சார்ந்தே அமைகின்றன. அவ்வாய்வின் மூலம் மனித சமூகத்தைக் காணலாம். இவ்வாய்வுகளுக்கு மக்களின் வாழ்வியல் இலக்கியங்களான நாட்டுப்புற இலக்கியங்கள் பெரும் பங்காற்றுகின்றன. அந்த வகையில் சமகால நெய்தல் நில மக்களின் வாழ்வியலை அறிந்துகொள்ளும் நோக்கில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. நெய்தல் நிலத்தில் பிறந்து நெய்தல் நில வழக்காறுகளைத் தன் எழுத்துக்களில் பதிவு செய்யும் சமகால எழுத்தளர்களான சப்திகா மற்றும் இரையுமன் சாகரின் நூல்கள் ஆய்வு நூலாக எடுக்கப்பட்டுள்ளன.

## ஆய்வு நோக்கம்

நெய்தல் நிலம் என்பது பண்டைத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். கடலும் கடல் சார்ந்த இடங்களும் நெய்தல் என அழைக்கப்படுகின்றன. சமகால கடற்கரை மக்கள் அவர்களுடைய வரலாறுகளை எழுதத் துவங்கியிருக்கிறார்கள். குமரி மாவட்ட நெய்தல் நில மாந்தர்களின் வாழ்வியில் கூறுகளை யதார்த்தமாக எடுத்துக்கூறும் சமகால இலக்கியமான சப்திகாவின் 'விடியலின் வெளிச்சம்' நாவல் மற்றும் இரையுமன் சாகரின் 'வேளாப் பாடு' சிறுகதைத் தொகுப்பு காட்டும் நெய்தல் நிலா மாந்தர்களின் பழக்க வழக்கங்கள், சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் ஆகியனவற்றை சமூகப் பார்வையோடு ஆய்வு செய்வது ஆய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு முறை

நாட்டுப்புறவியலைப் பற்றி, "மானிடவியல் முறையில் நாட்டுப்புறவியல் என்ற வார்த்தைக்கு புராணக் கதைகள், கட்டுக்கதைகள் நாட்டுப்புறக் கதைகள், பழமொழிகள், விடுகதைகள், கலையின் பாற்பட்ட கணக்கற்றக் கூறுகள் போன்றவைகளைப் பற்றிய அறிவு என்று பொருள் கொள்ளலாம். இவையெல்லாம் பேச்சு வழக்கில் அமைந்திருக்கும். இலக்கியத்தைப் போல நாட்டுப்புறவியலும் கலை வடிவம் கொண்டது. இது, இசையோடும் ஆடலோடும் ஓவியத்தொடும் கைத்தொழில் பொருட்களோடும் தொடர்புடையது. ஆனால், வெளிப்படுத்தும் முறை வேறுபட்டிருக்கும்" என்று பாஸ்கம் கூறுவார் (Ramanathan, 1986).

ஆர்.டி.ஜேம்சன் நாட்டுப்புறவியலை எவ்வாறு கற்பது என்று விளக்கம் தரும்போது

- நாட்டுப்புறவியல் தொடர்பான செய்திக் குறிப்புகளைத் திரட்டுதல்.
- செய்தி குறிப்புகளுக்கு இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டுப் பார்த்தல்.
- செய்தி குறிப்புகளில் அடங்கியுள்ள நம்பிக்கைகளைத் தேர்வு செய்தல்.
- சமூதாய மனவியில் கூறுகளைக் காணுதல்.
- தனிப்பட்ட சமூதாய நிகழ்ச்சிகளைக் காணுதல்.

என்கின்ற ஐந்து வகைகளில் நாட்டுப்புற இயல்களைக் கற்கலாம் என்ற கருத்துகளுக்கு இணங்கவும் வில்வியம் தாமஸ் சு. சண்முக சுந்தரம், மரிய லீச் சங்கர் சென்குப்தா, தியோடர் கஸ்டர் ஜோனஸ் பால்ஸ், ஔரலியா எம். எஸ்பினோசா, சார்லஸ் பிலான்சிஸ் போட்டார் போன்ற நாட்டுப்புறவியல் அறிஞர்களின் நெறிமுறைகளைக் கருத்தில்கொண்டும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. அந்தவகையில் குமரி மாவட்ட நெய்தல் நில மாந்தர்களின் பழக்க வழக்கங்கள், சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றைச் சமூகப் பார்வையில் அணுகும் நோக்கில் இக்கட்டுரையின் பொருண்மை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. குமரி மாவட்ட நெய்தல் நில மக்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளைப் பாடுபொருளாகக் கொண்ட பெண் எழுத்தாளர் சப்திகாவின் 'விடியலின் வெளிச்சம்' மற்றும் இரையுமன் சாகரின் 'வேளாப் பாடு' ஆகிய இரு நூல்களையும் முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு நூல்கள் முழுமையாக வாசிக்கப்பட்டு நெய்தல் நில மாந்தர்களின் பழக்கவழக்கங்கள், சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் போன்ற பண்பு நலன்கள் சமூகப் பார்வையோடு ஒப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அதனடிப்படையில் துணைமை ஆதாரங்களாக குமரி மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் வாழும் பல்வேறு சூழலிலுள்ள இருபது நபர்களிடம் வினா நிரல் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வுக்கட்டுரை முன்னுரை, ஆய்வின் நோக்கம், ஆய்வு முறை, கதை பின்னணியும் சமூக பார்வையும், கதைப் பின்னணி காட்டும் நெய்தல் நில மக்களின் வாழ்வியல் கூறுகளும் பரிந்துரைகளும், முடிவுரை மற்றும் கதைப் பின்னணியின் அடிப்படையில் இருபது நபர்களிடம் கேட்கப்பட்ட வினாக்களும் பதில்களும் என்ற அடிப்படையில் ஆய்வுக் கட்டமைக்கப்பட்டுள்ளன.

## 'விடியலின் வெளிச்சம்' நூல் குறித்து

குமரி மாவட்ட மீனவ கடற்கரை கிராமங்களில் நடைபெறும் வரதட்சணைச் சம்பவத்தைக் கண்முன் காட்சிப்படுத்துகிறார் நாவலாசிரியர் சப்திகா. ஒவ்வொரு சாதியிலும் இக்கதை சற்று மாறுதலாக காட்சிபடுத்தப்படலாம். மகளின் திருமணத்தை நடத்தி வைப்பதற்கு அடைக்கலமும் லேனம்மாளும் எப்படியெல்லாம் கடன் வாங்குகிறார்கள். எப்படி கடனாளி ஆகுகிறார்கள் என்பதனை வாசகர் பார்வைக்கு அப்படியே கொண்டுவருகிறார்.

## 'வேளாப் பாடு' நூல் குறித்து

வேளாப் பாடு நூலில் பத்துச் சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. பத்துச் சிறுகதைகளும் மீனவர் மத்தியில் நடந்த நடக்கின்ற நிகழ்வுகளையே படம் பிடித்துக் காட்டுகிறது. அதுதான் இந்நூலுக்கான பெருமை. கதையின் போக்கு அவர் பேசும் கடற்கரை மொழியில் அமைந்துள்ளதால் அது நூலுக்கான இன்னொரு பெருமையாகப் பார்க்கப்படுகிறது. கதைகள் முழுவதும் அன்றாட மீனவர்களின் வாழ்வியலைச் சுற்றியே நிகழ்கிறது.

## கதை பின்னணியும் சமூகப் பார்வையும் - விடியலின் வெளிச்சம்

### நெய்தல் நில பெண்ணின் திருமண நிகழ்வுகள் குறித்த செய்தி

### வரதட்சணை

பணம் இருந்தால்தான் வேலையில் இருக்கிற பையனை விலைக்கு வாங்க முடியும். அவனை விலைக்கு வாங்க வரதட்சணை அதிகமாக கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் மீனவ சமூகத்தில் உள்ளது. அதுதான் மீனவ சமூகத்தில் கௌரவமாகப் பார்க்கப்படுகிறது. அப்படியென்றால் கடல் தொழில் அதனின் கீழான வேலையாகக் கருதப்படுகிறது. கடலில் மீன்பிடித் தொழில் செய்பவனுக்கு வரதட்சணை குறைவாக கொடுக்கப்படுகிறது. ஆம்! ரீத்தம்மாளின் கோரிக்கை இவ்வளவுதான் "மகனுக்கு மனைவியாகப் போகிறவள் கண்டிப்பாக நூறு பவுன் நகைப் போட்டிருக்க வேண்டும். கல்யாணச் செலவிற்கு பத்து இலட்சம் ரொக்கம் தர வேண்டும். சென்னையிலிருந்து நினைத்தவுடன் ஊருக்கு வந்து செல்வதற்கு ஒரு கோடா கார் ஐம்பது சென்ட் நிலம் தர வேண்டும்" (Sapthika, 2019).

"கொஞ்சம் குறைக்கக்கூடாதா?" என வடக்குத்தெரு மார்த்தா கேட்டபோது "ஒண்ணுக்கும் வழியில்லாம கடலுக்குப் போறவனுவ அஞ்சு இலட்சம் பத்து லெட்சமுன்னு வாங்குதானுவ. என் மோவன் அப்படியா. இவனுவளப்போல கடலுலயும் காத்துலயுமா வேலை பாக்குதான். அவனுக்குக் கடக்காத்து உப்புக்காத்து உடம்புல பட்டுத் தெரியுமா? மாறி கடத்தண்ணி உப்புத்தண்ணி குடிச்சுத்தான் தெரியுமா? எனக்க மோவன் சென்னையில அஞ்சுமாடி கட்டிடத்துல குளுகுளு அறையில ராசா மாதிரி வேல பாக்குதான். மாசம் நாற்பத்தஞ்சாயிரம் ரூவா சம்பளம். சும்மா ஒண்ணும் இல்லை என்ன. அவன கெட்டுறவ ராணிபோல வாழலாமே. எல்லாம் அவளுக்குத்தானே. உம்மவன எனக்குச் சம்பந்தங் கொண்டா எனக்கு சம்பந்தம் கொண்டான்னு தினமும் போனுக்கு மேல போனு ஆளுக்கு மேல ஆளு வந்துண்டே இருக்கி. உங்களுக்கு முடியாதுன்னா வேலைய பாத்துண்டு போங்க" என முகத்தில் அடித்தாற்போல் பேசினாள் (Sapthika, 2019).

அடைக்கலம் கடலில் மீன்பிடிப்பவர். அவருக்குச் சொந்தமாக இருப்பது கட்டுமரம் மற்றும் சிறிய ஓட்டுவீடு. அவருடைய இலட்சியம் ஒன்றே ஒன்றுதான். அவருடைய மகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும். கைநிறைய சம்பளம் வாங்குகிற நல்ல பையனாகப் பார்த்துத் திருமணம் செய்து வைக்க வேண்டும். பெண்ணைப் படிக்கவைத்து அவளுக்கு வேலை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் முக்கியமில்லை. அவளை படிக்கவைத்து வேலையில் இருக்கிற பையனை விலைக்கு வாங்க வேண்டும். ஒரு சராசரி மீன்பிடித் தொழிலாளிக்கு இப்படிப்பட்ட கனவுகளும் இலட்சியங்களும் உருவாகி விடுகிறது. அப்படித்தான் கனவு காண சமூகம் கற்றுக் கொடுக்கிறது.

ரீத்தம்மாளின் மகன் மதனை வசந்தாவுக்கு விலைப் பேசுகிறார்கள். வசந்தா ஒரே மகள். எம்.பி.ஏ. படித்திருக்கிறாள். ஒருவழியாக நூறுபவுன் நகை இரண்டு இலட்சம் ரொக்கம் மற்றும் வசந்தாவின் பெற்றோர் வீட்டை மணமகன் பேரில் எழுதுவது என்கிற முடிவுக்கு வருகிறார்கள். இதில், 'திருமணங்கள் செர்க்கத்தில் நிச்சயக்கப்படுகின்றன' என்ற முன்னோர் வாக்கு பொய்த்துப் போய்விடுகின்றன. திருமணங்கள் ரொக்கத்தில் தான் நிச்சக்கப்படுகிறது என்பதைத் துணிந்து சுட்டிக் காட்டுகிறார் எழுத்தாளர். என்றாலும் திருமணத்திற்கு முன்பே மாமனார் வீட்டை ஏழுதி வாங்குவது என்பது மீனவ முக்குவ சமூகத்தில் நடைமுறையில் இல்லாத ஒன்றாகும். அவ்வாறு இருந்தாலும் அது அரிதான செயலாகத்தான் இருக்கும். இக்கருத்து நெய்தல் நில மாந்தரின் நாட்டுப்புற வாழ்க்கைக்குச் சற்று முரணாகவும், உண்மைக்குப் புறம்பானதாகவும் காணப்படுகிறது.

## சீட்டு நடத்துதல்

மீனவ சமூகத்தில் சீட்டு நடத்துவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வார சீட்டு, மாதச் சீட்டு, மூன்றுமாதச் சீட்டு, ஆறுமாதச் சீட்டு என லட்சக்கணக்கில் பணத்தின் தொகைக்கு ஏற்ப சீட்டுகளைப் பெண்கள் நடத்தி வருகிறார்கள். பணத் தேவையில் இருப்போர் முதல் சீட்டைப் போட்டிபோட்டு குறைந்த தொகைக்குப் பிடிப்பார்கள். அவ்வாறு பிடிப்பவர்கள் பலமடங்காக பணம் கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதுண்டு. சீட்டு நடத்துபவருக்குக் கணிசமான தரகுத் தொகை கிடைக்கும். சீட்டு நடத்துவதற்கான உரிமத்தை முறைப்படி அரசிடமிருந்து பெற வேண்டும். அதற்குரிய விழிப்புணர்வு நடைமுறையில் இல்லை. வசந்தியின் தாய் லேனம்மாள் அப்படிப்பட்ட தொழிலைச் செய்து வந்தார். குறுக்கு வழியில் திருட்டுத் தொழில் செய்வது எப்படியோ அப்படித்தான் சீட்டு தொழில் நடத்துவதும் அதில் இலாபம் தேடுவதும். அச்சீட்டை யாராவது பிடித்துவிட்டு பணம் கட்டாமல் போனால் அத்திருட்டுத் தொழிலில் நியாயம் வேண்டி காவல் நிலையம் செல்ல முடியாது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை லேனம்மாளுக்கு ஏற்பட்டது.

"பச்சப் பச்சையா அறுப்பு கண்டம் போட்டியும் ஒருத்திவளும் பணம் வச்சாட்டாளுவளே. அந்தால சீட்டுத் தொழிலை விட்டதுதானே" என அவளுடைய கணவன் அடைக்கலத்திடம் கூறுகிறபோது அந்த கள்ளத் தொழிலின் வீரியம் கடலோரத்தில் இன்னும் குவிந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம் (Sapthika, 2019). பச்சப்பச்ச கெட்ட வார்த்தைகள் ஒன்றும் மீனவ சமூகத்திற்குப் புதிதல்ல. கங்கை நீரில் குளித்தால் பாவம் பறந்து விடுவதுபோல் பாவசங்கீர்த்தனம் செய்தால் பாவம் பறந்துபோகும் என்கிற நம்பிக்கை இன்னும் மக்கள் மத்தியில் தொடரத்தான் செய்கிறது.

"சீட்டு ஒன்றுதான் கடலோரத்தில் பிரதான சேமிப்பு. அது, அவசரகால ஏடிஎம் ஆகும். அதனை தொடர்ந்து நடத்த நாலுபேரிடமிருந்து நாலு வார்த்தை கேட்டுத்தான் ஆகணும். லேனம்மாளிடம் அந்த சகிப்புத்தன்மை இருக்கவில்லை" என நூலாசிரியர் சப்திகா பேசுகிறபோது அந்த திருட்டுத் தொழிலுக்கு ஆதரவு அளிப்பது போன்று நாவலாசிரியரின் கருத்து அமைந்துவிடுகிறது. அதனை அவர்களின் சமயமும், சமூகமும் தவறு என்று சொல்லவில்லை (Sapthika, 2019). அதனால் மீனவ சமூகத்தில் ஏற்படுகிற பிரச்சனைகள் கணக்கில்லாதவை. அந்த பிரச்சனைகளைக் கையாளவோ அல்லது அதற்கு முடிவு கட்டவோ முதுகெலும்புள்ள அமைப்புகள் அச்சமூகத்தில் இல்லை. அப்பப்ப பூகம்பம் எழும்புவதுபோல் பிரச்சனைகள் எழும்பிச் செல்லும். அதற்கு சிலர் நியாயம் பேசி கூட்டத்தைக் கலைந்து போகச் செய்வர். சில நேரங்களில் சிலரின் மண்டைகளும் உடையும். வழக்குகளும் பதிவாகும்.

## சடங்கு முறைகள்

மீனவச் சமூகத்தைச் சார்ந்த முக்குவ இன மக்களிடத்தில் நிலவுகின்ற பழக்கவழக்கப்படி முதலிரவு மணமகள் வீட்டிலேதான் நடக்கும். திருமணமாகி மூன்று நாட்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடந்த மதனுக்கு மனைவி வசந்தியோடு வெளியே சென்றுவர ஆசை ஏற்பட்டது. முக்குவ இன வழக்கத்தில் அதற்கு இடமில்லை. திருமணமாகி கணவன் வீடு செல்லும் வரை அதாவது மறுவீடு

காணும்வரை இருவரும் வீட்டைவிட்டு வெளியில் செல்லக்கூடாது. மணமகனைப் பொறுத்தளவில் இந்த அன்புச் சிறை சற்று கடினம் என்றாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றுதான். இச்சிறை தற்போதைய காலங்களில் தவிர்க்க முடியாமல் கால நீரோட்டத்தில் உடைபட்டு வருவதைக் காணமுடிகிறது.

"இந்த மறுவீடு முறையைக் கண்டுபிடிச்சவன் மட்டும் என் கையில கிடைச்சாண்ணா அவ்வளவுதான்" என்று மதன் பேசுகிறபோது அந்த இடத்தில் நாவலாசிரியர் சப்திகா சப்தமாகப் பேசப்படுகிறார் (Sapthika, 2019). ஒரு வழக்கத்தை உடைக்க கேள்வி வாயிலாக எத்தனிக்கிறார். இருப்பினும் அந்த முக்குவ வழக்கம் ஏற்கனவே உடைபட்டுவிட்டது. "உன்னையும் மாப்பிள்ளையையும் வெளியே கூட்டிண்டுப்போய் படம் புடிச்சணுமாம்" என லேனம்மாள் பேசுகிறபோது உரக்க எழும்பிய சப்தம் மேலும் விடியலைக் கொடுத்தது (Sapthika, 2019).

திருமணம் முடிந்த பின்பாக மணமகனையும் மணமகளையும் வீட்டிற்கு வெளியே அழைத்துச்சென்று விதவிதமாகப் புகைப்படம் எடுப்பது ஒரு கௌரவமாக மீனவ சமூகத்தில் பார்க்கப்படுகிறது. அந்த புகைப்படச் செருகேடு (புகைப்பட ஆல்பம்) விலையைக் கேட்டு அந்த கடைப் பக்கம் திரும்பிப் பார்க்காமல் சென்றவர்கள் நிறையபேர் உண்டு. புகைப்படம் எடுக்கும் இந்த வறட்டு கௌரவம் மீனவ சமூகத்தில் களையப்பட வேண்டிய ஒன்றுதான். அதுகுறித்து நாவலாசிரியர் சப்திகா மௌனம் சாதிக்கிறார்.

மறுவீடு செல்வதுவரை திருமணமான மணமக்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூடாது என்பதற்கு சொல்லப்படும் ஐதீகம் யாதெனில், காத்துக் கறுப்புத் தொட்டுவிடும் என்பதுதான். அதற்காக வசந்தியின் தாய் லேனம்மாள், ஒரு இரும்புச் சாவியை மகளின் கையில் கொடுக்கிறாள். இன்றும் மீனவ சமூகத்தில் இப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளை நம்பக்கூடிய மனிதர்கள் இருக்கிறார்கள். இந்நிலையில், "அம்மாவின் அறியாமையை எண்ணி அழுவதா அல்லது சிரிப்பதா என்று தெரியாமல் நின்று கொண்டிருந்தாள் வசந்தி" என்கிறபோது, நாவலாசிரியர் சப்திகாவின் கருத்தாக்கம் தெம்பூட்டுகிறது. நாவலாசிரியர் மீது மதிப்பு ஏற்படுகிறது (Sapthika, 2019).

ஏன் பெண் வீட்டில் முதலிரவு நடத்தப்பட வேண்டும் என்பதற்கு, "மறுவீடு போறதுக்குள்ள பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருத்தருக்கொருத்தர் நல்ல பழகிடுவாங்க. நமக்குத் துணையாய் அத்தான் இருக்காங்கண்ணு ஒரு தைரியம் மனசுல வந்திடும். வாழப்போற வீட்டுல என்ன வேணும்னாலும் சங்கடப்படாம மாப்பிள்ளைகிட்ட கேட்டுக்குற பக்குவம் பெண்ணுக்கு வந்திடும். புதுசா வாழப்போற வீட்டுல நமக்கு ஒரு துணையிருக்குண்ணு தெம்பா இருக்கும். அதே ஏழு நாளுக்குள்ளாடி மாப்பிள்ளையும் பெண் வீட்டுக்காரங்ககூட நல்ல உறவை ஏற்படுத்திக்கலாம். அதோடு தன்னோட மனைவி வளர்ந்த சூழலை ஒருமாதிரி புரிஞ்சுக்க முடியும். அது அவங்களோட மீதியுள்ள காலங்களை மகிழ்ச்சியா வாழ வழிவகுக்கும் இல்லையா. அதனால்தான் இந்த முறையை உருவாக்கின நம் முன்னோர்கள் ரெம்ப அறிவாளிகள்" என வசந்தி வாயிலாக நாவலாசிரியர் பேசுகிறபோது முக்குவர்களின் வழமைச் செழுமைப் பெறுகிறது (Sapthika, 2019).

அந்த ஐந்து அல்லது ஏழு நாட்களிலில், மருமகன் என்கிற முறையில் மாமியாரையும் மாமனாரையும் மற்றும் மனைவியின் வேறு உறவினர்களையும் புரிந்துக்கொள்ள வாய்ப்பாக அமைகிறது. அதைவிட மேலாக, மனைவியின் வீட்டுப் பொருளாதார நிலையை அறிவதற்கான சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த திருமணத்திற்காக எவ்வளவு கடன் வாங்கியிருகிறார்கள், கடன் பட்டிருக்கிறார்கள் என்பதனை மருமகன் அறிந்துக்கொள்ள ஏதுவாகிறது. அதிலிருந்து, கற்றுக்கொள்ள நிறையவே இருக்கிறது. அதுதான் உறவுகளின் சங்கமம். இந்த அன்புக் கடலில் நீந்தி குளிப்பவர்கள், அழகானதொரு குடும்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள். 'நல்ல மருமகன்' என்கிற பெயரினைச் சம்பாதிக்கிறார்கள்.

"பதினெட்டு, இருபது வருடம் நல்லா வேர்விட்டு வளர்ந்த மரத்தை அப்படியே வேரோடு பிடுங்கி வேற இடத்துல நட்டு வைப்பது போலத்தானே!" என்கிற நாவலாசிரியரின் கருத்தாக்கம் வாசிப்பவரைச் சிந்திக்கச் செய்கிறது. கணவனின் வீட்டில் ஏற்படும் நெருக்கடிகளை அறிந்து, சூழலுக்கு ஏற்றவாறு தன்னை அவள் தகரமைப்பு செய்கிறாள் (Sapthika, 2019). "புதிய வீடு, புதிய குடும்பம், புதிய சூழ்நிலை

இப்படி எல்லாம் புதுசு" ஆக இருக்கும்போது, அவ்வீட்டில் தன்னை தக்கவைத்துக் கொள்ளவே பொதுவாகப் பெண்கள் மௌனமாக போராடுகிறாள் (Sapthika, 2019). இந்நாவலில் வலம்வரும் வசந்தியின் கணவன் மதன் சென்னையில் வேலைப் பார்ப்பதால், அவளுக்கு அப்படியொரு சூழ்நிலை ஏற்படவில்லை.

வரதட்சணை கொடுக்க வேண்டிய இழிநிலைத் தொடர்கிறது. 'வரதட்சணை வாங்குவதும் குற்றம்' என்கிற சட்டம் இன்னும் தூங்கிக் கொண்டுதான் இருக்கிறது. அதற்குக் காரணம், அந்த சமூகமும், சமயமும் தான். வரதட்சணை வாங்காமல் திருமணம் செய்யும் ஆண்கள் அச்சமூகத்தில் மிகக் குறைவே. பெண் வீட்டாரிடம் ஆண் வீட்டார் பேரம் பேசிப் பிச்சை கேட்பது பரிதாபாத்திற்குரிய நிலையே. வரதட்சணை என்கிற தீமையைப் புனிதப்படுத்தும் அந்த சமூகத்தின்மீது அல்லது அந்த சமயத்தின்மீது நாவலாசிரியர் போதிய பாய்ச்சலை வெளிப்படுத்தவில்லை என்பது ஒரு குறைதான்.

மாதம் நாற்பதாயிரம் சம்பளம் வாங்கும் மதன், பெண் வீட்டாரிடம் திருமணச் செலவுக்காக கையேந்தி நிற்கிற அவலம், சமூகத்தின் அவலமாகத்தான் பார்க்க முடிகிறது. அப்பணத்தை வாங்கித்தான், மணமகன் வீட்டில் செலவு செய்யப்படுகிறது என்பதும் இழிவான செயலே. மணமகன் வீட்டார், அவர்களுடைய சொந்தப் பணத்தைப் போட்டு திருமணச் செலவு செய்ய வேண்டிய எந்தவொரு தேவையும் இல்லாமல் போய்விடுகிறது. திருமணத்தில், அவர்களுக்கு எந்தவித பொறுப்பும் இல்லாமல் போய்விடுகிறது. அத்தனை பணச் சுமைகளையும் பெண் வீட்டார் தலையில் குப்பைபோல் கொட்டுகிறார்கள். "வசந்தியின் வீட்டாரிடமிருந்து பெற்றுக்கொண்ட இரண்டு இலட்சம் பணமும் திருமணத்திற்கான ஆடம்பரச் செலவுகளிலும், நண்பர்களுக்குப் விருந்து கொடுப்பதிலும், குடிப்பதிலுமே கரியாய்க் கரைந்துவிட்டது" என்பதிலிருந்து முக்குவ திருமணத்தின் அவல நிலையை அறிந்து கொள்ளலாம்.

"மதனுக்கு இந்த இரண்டு இலட்சமும் செலவழிந்து போனதில் பெரிய வருத்தமோ, எவ்வித குற்ற உணர்ச்சியோ சிறிதும் இல்லை" என்கிறார் நாவலாசிரியர் (Sapthika, 2019). அது, உண்மைதான். இந்த விசயத்தில், அப்பணத்தைக் கொண்டு, உடைகள் எடுக்கும் பெண்களாக இருந்தாலும் சரி, நண்பர்களின் குடிக்காக செலவு செய்யும் ஆண்களாக இருந்தாலும் சரி, அதுகுறித்து கவலைப்படுவதே இல்லை. அதற்குக் காரணம், ஆடம்பரத் திருவிழாக்கள், அவர்களை ஆடம்பர வாழ்வுக்கு மாற்றிவிட்டது.

இதுகுறித்து மதனின் மாமா அலெக்ஸ் பேசுகிறபோது "ஏல மக்கா! நம்ம சமுதாயத்தில பெண் குழந்தை ஒண்ணு பிறந்தவுடனே அந்தப் பிள்ளைய பெத்தவங்க, அந்தநாளே அந்த பிள்ளைக்கு கலியாணத்துக்குப் பணம் சேர்க்கத் தொடங்கிடுவாவு. அதுக்காக தம் வாழ்க்கை முழுசும், இராப்பகலா உழைச்சு உழைச்சு ஓடாய்த் தேஞ்சு, கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து, அதுவும் திகையாம அக்கம் பக்கத்துல கடன உடன வாங்கித் தன் மகளுக்குக் கல்யாணம் நடத்துவாவு. அதுக்கப் பெறவு, வாங்கின கடன அடைச்சுறதுக்குத் தன் வாழ்க்கையைச் செலவழிக்கிறாவு. இப்படி வாழ்நாள் முழுவதும் வருத்திச் சேர்த்த பணத்த வாங்குத உன்னைப்போல உள்ளவனுவ எந்தவித உறுத்தலும் இல்லாமல், அந்தப் பணத்தைத் தண்ணியப்போல வாரி இறைச்சு செலவு செஞ்சு போடுதானுவ. இவ்வளவு ஆடம்பரச் செலவு செய்து கல்யாணம் செய்யணும்ணா நீ சம்பாதிச்ச பணத்தில செய்யணும். என்னத்துக்குக் கலியாணச் செலவுக்குப் பெண் வீட்டுல பணம் கேக்குறோம்" என உரைக்கிற மாதிரி கேள்வி கேட்கிறார் (Sapthika, 2019). அதற்கு அவன், "ஊரு உலகத்தில நடக்காததையா நான் செஞ்சுட்டேன்" என்கிற பதில், பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது (Sapthika, 2019). அதற்குக் காரணம், ஆடுகளைப்போல் பின்தொடரும் கூட்டமாக இளைஞர்கள் மாறிவிட்டார்கள். சுயமாக சிந்திக்காத அல்லது சுயமாக முடிவு எடுக்காத வகையில், அவர்களின் மூளையைச் சமூகம் மழுங்கடிப்புச் செய்துவிட்டது.

அலெக்ஸ் மறுமொழியாக, "அடுத்தவனுக்க உழைப்பிலே வந்த பணத்தை நாம் ஊதாரித்தனமாகச் செலவு செய்யுறதும் ஒருவகையில் திருட்டுதான். அது எதுக்கு உனக்கு வெளங்கேல. இதுமட்டும் எல்லோருக்கும் வெளங்குச்சுணா நாட்டில வரதட்சணைக் கொடுமைகளும் தீர்ந்திரும். பெண் சிசுக் கொலைகளும் தீர்ந்திரும்" என்கிறபோது சட்டத்தைவிட விழிப்புணர்வே சிறப்பானதாக நாவலாசிரியர் சப்திகா கருதுகிறார் (Sapthika, 2019).

அதேவேளையில், ஐம்பது பவுன் அல்லது நூறு பவுன் என்று பேசுகிற வரதட்சணை போக்கு, எல்லா சாதியிலும் தொடரத்தான் செய்கிறது. இத்தீமையை ஒழிப்பதற்கு சமயங்களும் சமூகங்களும் முன்வரவில்லை. அதுபோல், சட்டமும் தனது கடமையைச் செய்யாமல் வேடிக்கைப் பார்ப்பது தீர்வல்ல.

முக்குவ சமூகத்தைப் பொறுத்தளவில், வசந்தியின் கழுத்தில் ஏற வேண்டிய ஏழு பவுன் தாலியையும் அவளுடைய பெற்றோர்தான் கொண்டுவர வேண்டும். மணமகன், அதனை வாங்கி மணமகள் கழுத்தில் கட்டுவார். இதையெல்லாம் முக்குவ சமூகத்தின் பெருமையாகப் பேசிக் கொண்டிருக்க முடியாது. இத்திருமணத்திற்காக எவ்வளவோ கடன் வாங்கியும் லேனம்மாளால் நூறு பவுன் நகைகளைப் புரட்ட முடியவில்லை. மகளின் கழுத்தில் தாலி ஏறுவதற்கு, "தன் கழுத்திலிருந்த ஏழு பவுன் தாலியைக் கழற்றி அடைக்கலத்திடம் நீட்டினாள்" லேனம்மாள் என்கிறபோது இந்த மீனவ சமூகத்தை நினைத்து மனம் வருத்தம் அடையத்தான் செய்கிறது (Sapthika, 2019).

"இப்படியாக எண்பது பவுன் நகை தேறியது. இன்னும் இருபது பவுன் வேண்டுமே" என்கிறபோது பெண்ணைப் பெற்ற பெற்றோர்கள் படுகிற மன வேதனை உச்சத்தைத் தொடுகிறது (Sapthika, 2019). ஒரு தாலி இறக்கப்பட்டு, இன்னொரு தாலி ஏற்றப்படும் திருமணங்கள் புனிதம் என்கிற பெயரால் ஆலயத்தில் ஆடம்பரமாக நடப்பது விந்தையானது.

வசந்தியின் கழுத்தில் தாலி ஏறுகிறபோது, "இது தாலி அல்ல. இந்தச் சமுதாயம் நமக்குப் போடும் வேலி. நாம் என்ன நினைத்தாலும் அந்த வேலியைத் தாண்டி ஒன்றும் செய்ய முடியாது. ஒரு கட்டத்தில் நாமே அந்த வேலிக்குள் அடங்கிப் போய்விடுவோம். அதைத்தாண்டி வர நினைத்தால், அதுவே நம் கழுத்தை நெரித்துவிடும். கூட்டுக்குள் அடைபட்ட கூண்டுக்கிளி போலத்தான் தாலிக்குள் அடைபட்ட பெண்களும் கூண்டை விட்டுப் பறக்க நினைத்தால், அதன் சிறகுகளை முறித்துவிடுவர். அதுபோலத்தான் நமது வாழ்வும்" என்கிற அவளுடைய கல்லூரி ஆசிரியரின் அறிவுரையை நினைத்துப் பார்க்கிற சம்பவம் நயம்பட தொனிக்கிறது. நாவலாசிரியரின் இக்கருத்து உரக்க பேசப்பட வேண்டும். அது, தொடர்ந்து பேசப்பட வேண்டும் (Sapthika, 2019).

கல்லூரி நாட்களில், பேச்சுப்போட்டியிலும் பட்டிமன்றங்களிலும் வரதட்சணைக் கொடுமையை எதிர்த்துப் பேசியவள் வசந்தி. தன் தோழிகளிடம் வரதட்சணைக் கொடுக்க மாட்டேன் எனச் சூளுரைத்தவள் வசந்தி. இன்று, அவளுடைய பேச்சுக்கள் அனைத்தும் நட்சத்திரங்கள் இல்லா வானத்தைப்போல் பொலிவிழந்துக் கிடக்கின்றன. அவளது வீட்டை வரதட்சணை கடன், முட்டுக்கொடுத்து தூக்கி நிறுத்துகிறது. 'மாதராய் பிறந்திட மாதவம் செய்திட வேண்டும்' என்கிற வாக்குப் பொய்த்துப் போனது. வரதட்சணை விசயத்தில், இப்படி பல வசந்திகளின் வீரப் பேச்சுகள் முடமாகிப் போயின என்பதனைப் பார்க்க முடிகிறது. பெண்களின் போராட்டம் விடிவின்றி இப்படியே கடந்து போகிறது.

நூறு பவுன் நகைகள் சரியாக இல்லை என்தனை அறிந்த மதன், "நூறு பவுன் நகைக்குத் தானேடி உன்னைக் கட்டவே சம்மதிச்சேன். உனக்க அழகைக் கண்டா உன்னை கெட்டுனேன்" என்கிறபோது திருமண வாழ்க்கையின் அர்த்தங்கள் ரொக்கத்தில் கட்டமைக்கப்படுகின்றன என்பது தெளிவாகவே தெரிகிறது. கத்தோலிக்க சமயத்தின் இரண்டு நாள் திருமணப் பயிற்சி வகுப்புகள் கட்டாயத்தின் கொக்கரிப்புகளாக மாறிப் போகின்றன (Sapthika, 2019).

வசந்தியின் தந்தை, கட்டுமரத்தில் கடல் தொழில் செய்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக அடிபட்டு மரித்துவிடுகிறார். அப்பொழுது, "உங்கப்பன் ஊரைச் சுற்றி வாங்கி வச்சிருக்கக் கடனெல்லாம் இனி யாரு அடைப்பாங்க? யாரு தலையில விழும்?" என்கிற மதனின் கேள்வி நூறு வேள்வி கணைகளை முன்வைக்கிறது (Sapthika, 2019). கடன்காரர்களுக்கு லேனம்மாள் என்ன பதில் சொல்வாள்? அவளின் நிலை என்ன? "படித்தவர்களின் பணத்தாசைதானே இன்று நம் நாட்டையே உருக்குலைத்துக் கொண்டிருக்கிறது" என்கிற நூலாசிரியர் சப்திகாவின் சத்தம் இன்னும் அழுத்தமாக ஒலிக்கப்பட வேண்டும் (Sapthika, 2019). அதே வேளையில், முக்குவர் இன மணமகனில் பெரும்பாலானோர் திருமணத்திற்குப் பின்பு பெண் வீட்டாரின் சுமைகளையும் தன்வீட்டு சுமைபோல்

கருதியே பார்க்கும் மனப்போக்கு இருப்பதை ஆய்வாளராகிய நான் என்னுடைய அனுபவத்தில் பார்த்திருக்கின்றேன்.

மதனுக்கு எதிராக வசந்தி எடுத்திருக்கிற ஆயுதம் வரதட்சணையின் கீழ் வழக்குப் போடுவேன் என்பதாகும். ஒட்டுமொத்த குடும்பமே காவல் நிலைய வாசலையும், நீதிமன்ற வாசலையும் மிதிக்க வேண்டியிருக்குமே என்கிற பயம் மதனுக்குப் பயத்தை உருவாக்கியது. தன்னுடைய நடத்தைத் தெருவுக்கு வந்துவிடுமே. ஊர்முழுவதும் செய்தி பரவினால் தன்னுடைய குடும்பத்தை என்ன நினைப்பார்கள் என்கிற பயம் ஏற்படுகிறது. "வசந்தியின் ஒவ்வொரு வார்த்தையும், அவன் கன்னத்தில் பளார் பளார் என ஓங்கி அறைவதுபோல் உணர்ந்தான்." "மௌனம் கலைந்தது, மாற்றம் பிறந்தது. விடியலின் வெளிச்சம், அவர்களின் வாசலில் எட்டிப் பார்த்தது" என்கின்ற நாவலின் இறுதி ஐந்து வரிகள் பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வைக் காட்டுகின்றன (Sapthika, 2019).

## கதை பின்னணியும் சமூகப் பார்வையும் - வேளாப் பாடு

### கெரவங் கெட்டவ: (கடலில் இறக்கும் மீனவர் குறித்த கதை)

"பெரிய அலைகள் வேகமாய்த் தாவும் வீட்டுப் பூனைபோல தடுப்புச் சுவரைத்தாண்டி வீடுகளுக்குள் புகுந்தன" என்கிற வாக்கியத்தில் இருந்து எழுத்துலகில் இறையுமன் சாகரின் வர்ணனைகளும் சமூகப் பார்வையும் துவங்குகின்றன. "இதுபோன்ற காலங்களில் கடற்கரையில் குளம்போல கடல்நீர் கட்டிக் கிடக்கும். அந்த பொட்ட குளத்தில் நீந்திக் குளித்து விளையாடுவது தனி சுகம்!" என்கிறார். "பொட்ட குளம்" என்பதனைக் குளச்சல் பகுதியில் "கொட்டாழம்" என்பார்கள். இடத்திற்கு இடம் சொற்கள் வேறுபடுவதைக் காணமுடிந்தது. அதேவேளையில் கடல் சீற்றத்தின்போது கடலுக்கு அருகில் வசிக்கும் மீனவர்களின் பிரச்சனைகளும் பதிவுச் செய்யப்படுகின்றன.

"அந்த கொம்ப ஒரு கெரவங் கெட்டவ. மொதல்ல கெட்டுனவனும் சத்துப் போனான். இப்பம் இது ரண்டாம் கெட்டு இவனும் செத்துப் போனான்" என ஜேம்சின் இறப்பிற்கு சொல்லப்பட்ட காரணம் அவரது மனைவியின் இராசி சரியில்லை என்பதுதான் (Iraiyuman Sagar, 2017). "அவனுக்கியான் ஒரு நல்ல பெண்ண பாத்து கெட்டு குடுக்கபணியா" என அடக்க வீட்டில் சொல்லப்படுகிற செய்தியானது அவளது கணவரின் மரணத்தைவிட அவளைப் பெரிதாகக் கலங்கடித்தது என்பது கதைக்கு வலு சேர்க்கிறது (Iraiyuman Sagar, 2017).

"கெரவங் கெட்டவ" சிறு கதையானது கடலில் காணாமல்போன ஒரு மீனவனின் உண்மைக் கதையினை மையமாகக்கொண்டு நகர்த்தப்பட்டிருக்கிறது. கதையின் முடிவு ஓராயிரம் நாவுகளின் இரைச்சலானது இப்படித்தான் ஒவ்வொரு ஊர்களிலும் புகைந்து, போக்கற்ற நிலையில் போய்ச் சேரும் என்பதனைப் பிரதிபலிக்கிறது. "தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாது நாவினால் சுட்ட வடு" என்கிற வள்ளுவன் வாக்கு இங்கு பொய்த்துப்போனது என்பதனைக் கதையின் முடிவு பிரதிபலிக்கிறது (Iraiyuman Sagar, 2017).

## ஆசை (தலைச்சுமடு எடுக்கும் மீனவ பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகள் சார்ந்த கதை)

பெண்கள், மீன் கொண்டுபோக தனிப்பேருந்து கிடையாது. இங்கு பிசிசி பேருந்து ஒன்று ஓடியது. வண்டியில் ஒரு பாதி மட்டும் சாமான்கள் வைக்க, இருக்கை இல்லாத கம்பிகள் அமைத்து வைத்திருந்தனர். இருக்கை கிடைக்காதவர்கள் எல்லாம் அதில் ஏறி உட்கார்ந்து கொள்வதும் உண்டு. இப்பொழுது அந்த வண்டியும் இல்லை. அதனால் மீன் விற்க போகும் பெண்களின் வாழ்க்கை கடினமாக இருக்கிறது என்பது நிதர்ச்சனமான உண்மை.

மீனவ பெண்கள் மீது நடத்தப்படும் நடத்துனரின் ஏச்சுக்கள் காலங்காலமாக சகித்து வரப்பட்டுள்ளது. அதற்கான கோரிக்கைகள் எதுவும் மீனவர் குறைதீர்ப்பு கூட்டத்தில்

எழுப்பப்படுவதில்லை. மீன் சருவத்தைச் சவுட்டித் தள்ளும் நடத்துனர்மீது இதுவரையும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. "ஏய் அங்க தூர தள்ளி நில்லு. ஏத்தப்பிடாது" என்கிற மிரட்டல்கள், "இவியளுக்கு வேற வண்டியே கிட்டல்லையோ...?" என்கிற ஏளனப் பேச்சுகள் என பேருந்துகளில் தொடரத்தான் செய்கின்றன. மீனவப் பெண்மணி, மீனைப் பேருந்தில் ஏற்றுவதற்காக நடத்துனரிடம் கெஞ்சுவதனைப் பார்க்கும்போது வேதனையின் உச்சம்தான் உருக்கமாகவே மிஞ்சி நிற்கின்றது. கேரளத்தில், மீன் கொண்டுச் செல்ல தனிப் பேருந்து இயக்கப்படுகிறது என்கிற எதார்த்த நிலையை, "ஆசை" என்கிற சிறுகதை வாயிலாகக் கூறுகிறார். சிறுகதை ஆசான் இரையுமன் சாகர். கன்னியாகுமரி மாவட்டம் மீண்டும் கேரளாவுடன் இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் நடைமுறையில் எழுவதற்கு மீனவப் பெண்களின் அவல நிலையும் ஒரு காரணம்.

தனது மூன்று குழந்தைகளைக் காப்பாற்ற மீன் விற்பனை செய்யும் ரோசம்மாவின் வாழ்க்கைப் போராட்டம் சிந்திக்க வைக்கிறது. 'சருவத்தயும் தூக்குண்டு வாறது. மீனு வேங்க களுவில்லாங்கி வீட்டுவள்ல கெடக்கணும் வல்லிய மதுப்புல ஒயித்து பிடிச்சுண்டு வாறத". இக்குரல் அதிகமாகவே கடற்கரையில் ஒலிக்கிறது. இதில், ஒருபுறம் வறுமையும், இன்னொரு புறம் நியாயமும் தொக்கித்தான் நிற்கிறது (Iraiyuman Sagar, 2017).

## சொறி (கரைமடி தொழில் செய்யும் மீன் பிடி தொழிலாளர் பற்றி கதை)

சொறி என்பது செல்லி மீன்கள். வறுமையில் உள்ள குழந்தையின் தந்தை பள்ளி கூட கட்டணம் செலுத்த வழியின்றி இன்றாவது கிடைக்குமா என்ற எண்ணத்தில் கரைமடி இழுக்க செல்கிறார். கரைமடி மிகுந்த கனத்துடன் வருகிறது. மீனவர்களின் மகிழ்வும் எதிர்ப்பார்ப்பும் கூடுகிறது. பல மணி நேர உழைப்புக்குப் பின் இறுதியில் கரைமடி கரைக்கு வந்துபோது அதில் இருந்தவை பெரும்பாலும் ஒன்றுக்கும் பயனற்ற செல்லி மீன்கள் கடலன்னையை நம்பி ஏமாந்து போகும் இவர்களுக்குக் கூலி கிடைக்கின்றதோ இல்லையோ கரைமடி இழுத்து கொடுத்தால் குடிக்க பணம் கிடைக்கும். அந்த பணத்தைக் குடிக்க மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு கட்டாய சூழ்நிலையும் இக்கதையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

மீனவா எழுந்திரு (பெரும்பாலான மீனவர்களுக்கு சரியான விழிப்புணர்வோ சமூகப்பொறுப்போ இல்லை என்பதே இக்கதையின் கரு)

"எனக்க சிறுப்பத்தில இதுக்கு தெக்க ஆறு தெருவு உண்டு என்று போத்தி சொன்னபோது நம்ப முடியவில்லை. இத்தனை தெருக்களைத் தின்றுபோடுகிற அளவுக்குக் கடலுக்குப் பசியெடுத்ததா?" என்கிற கதையாசிரியரின் எதார்த்தமான போக்கு கதை ஓட்டத்திற்கு அழகுச் சேர்க்கிறது. "வரியேனுவ ஒழுங்கா கல்லயும் போடுதானுவயில்ல வீடெல்லாம் பாழா போறு" என்கிற மரியம்மாவின் புலம்பலும், "சாரே, போட்ட கல்லு மண்ணுக்குள்ள பூந்தி போய் கெடக்குது. ஒழுங்கா கல்ல போட்டா எங்களுக்கு இந்தக் கதி வந்திருக்காது" என்கிற முத்தம்மாளின் புலம்பலும் நாகர்கோவில் நாஞ்சில் அரங்கில் நடக்கும் மீனவர் குறைதீர்ப்புக் கூட்டத்திலும் கேட்கிறது (Iraiyuman Sagar, 2017). வந்த அரசு அதிகாரிகளுக்குப் பாதிரியார் இல்லத்தில் இளநீர் வெட்டிக் கொடுத்து உபசரிப்பு வழங்குவதிலும் குறை இல்லைதான். குறைகளைத் தீர்க்க கடந்த தேர்தலில் ஒரு மீனவ வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்கிற முழக்கமும், அது ஓய்ந்து போன வரலாறும் "மீனவா எழுந்திரு!" கதை மூலம் அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

## சுமை (ஆசைஆசையாக வளர்த்த குழந்தைகளே பெற்றோரைக் கவனிக்கவில்லை என்பதே சுமை)

"சுமை" வாசிப்பவருக்கு சுமையின்றி நகருகிறது. மார்க்கிரெட், ஆக்னஸ், தெரேசா ஆகியோரின் சுயநலம் இக்கதையில் வெட்ட வெளிச்சமாகிறது. பொதுவாக மீனவர் கிராமங்களில் பெண் பிள்ளைகள்தான் தாயையும் தகப்பனையும் மதிக்கும் கடைசி வரை கவனிக்கவும் செய்யும் என்பார்கள். அதுதான் நிதர்சனமான உண்மையும் கூட. இக்கதையில் அதனைத் தலைகீழாகவே பார்க்க முடிகிறது.

தாயை வீட்டு வேலை செய்ய வைத்து, வீட்டில் ஒரு வேலைகாரியாய் இல்லை, இல்லை, சம்பளமில்லா அடிமையாய் இப்படித்தான் பல வீடுகளில் நடக்கிறது. அந்தத் தாயின் தற்கொலை முடிவு, வாசிப்பவருக்கு தாய் நினைவை கண்முன் நிறுத்தும் உயிரோவியம். இப்படிப்பட்ட கதைகள்தான் கல்லூரிப் பாடங்களில் இடம்பெற வேண்டும்.

## வெளம்பரம் (உள்ளூர் ஊடகத்தில் வரும் ஒரு வெளம்பரம் ஒரு திருமணத்தை நிலை குலைக்கும் கதை)

கடற்கரை ஓரங்களில் அதிக துறவற சகோதரிகள் இருக்கக்கூடி காரணங்களுள் முக்கியமான ஒரு காரணம் வறுமை. ஆண்களின் போதை பழக்கமும் வறுமைக்கு மற்றொரு காரணம். மூன்று பெண் பிள்ளைகளைப் பெற்ற ஸ்டெல்லா, முதல் பெண் பிள்ளையைக் கட்டி கொடுக்க கடன் வாங்கிதான் திருமணத்தை நடத்துகின்றாள். அந்தக் கடனை அடைப்பதற்குள்ளாகவே இரண்டாவது மகளின் திருமணம் நடைபெற உள்ளது. திருமண தினந்தன்று மாப்பிள்ளை வீட்டார் உள்ளூர் ஊடகம் ஒன்றில் கொடுத்த வெளம்பரத்தைக் கண்டு, அதைப் பெண் வீட்டார் போட்டதாகத் தவறாகப் புரிந்து கொண்டு முதல் மகளின் திருமணத்திற்கு கடன் கொடுத்த லூர்து, 'பணம் கோட்டால் பணம் இல்லையாம், இப்பம் டிவியில வெளம்பர போட பணம் எங்கேணு வந்தது' என கோட்டு பிரச்சனை செய்து காவல் நிலையம் வரை சென்று அத்திருமண வீட்டையே கதிகலங்க வைத்த நிகழ்வை எழுத்தாளர் படம் பிடித்துக் காட்டுகின்றார் (Iraiyuman Sagar, 2017).

## காரக்கொழம்பு (சென்னையில் தங்கி வேலை பார்க்கும் இளைஞனின் வாழ்க்கை)

நெய்தல் நில இளைஞர்கள் தங்கள் ஊரைச் சார்ந்த யாரும் சென்னைக்கு வேலை தேடி வந்தால் அவர்கள் தங்குவதற்கு இடம் கொடுத்து செய்யும் உதவியே காரக்கொழும்பு கதையில் இடம் பெற்றுள்ளது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தைய சென்னை அறை, இன்றைய சென்னை அறையோடு ஒப்பீட்டுடாய்வு நோக்கில் சித்தகரிக்கப்பட்டுள்ளது. காலம் மாறினாலும் உணவின் வகை மாறவில்லை என்பதை இக்காரக்கொழம்பு, "இனி இதத்தான் தின்னப் போறீ. நாங்களும் நீங்களும் மட்டுமல்ல, ஊர்லயிருந்து யாரு வந்தாலும் இந்த காரக்கொளம்புதான். பாவப்பட்டவன், பணம் உள்ளவனணு எந்த பாகுபாடும் இருக்காது. காரக்கொழம்பு பார்க்கவோ, தின்னவோ நல்லா இல்லாம இருக்கலாம், ஆனா அது நம்ம வாழ்க்கையில முக்கியமான ஒண்ணாயிட்டது. இதத் தின்னு வாழ்க்கைய ஓட்டினவங்க இண்ணைக்கு வாழ்க்கைல அடுத்த கட்டத்துக்குப் போயிட்டாங்க. அதனால் இதப்பத்தி வருத்தப்பட வேண்டாம்" என்பது சிலர் சாலை ஓரங்களில் சிலவகை மூலிகளை வைத்து இதனை வாங்கி உண்ணுங்கள் (Iraiyuman Sagar, 2017). உங்களுக்குள்ள எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்துவிடும் என்பதைப்போல் இருந்தாலும் இதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

## வேளாப் பாடு - (அற்புதமான காதல் கதை)

ஒரே சாதியைச் சார்ந்த அரசு வேலையில் இருக்கும் பெண்ணும் சாதாரண கடல் தொழில் செய்யும் ஆணும் காதலிக்கும் காதல் சார்ந்தக் கதை. இக்கதையில் காதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்க "கடைசியில அவன் மடி வளச்சுண்டு கெடக்குவான், நீ மீனு செமுக்கயாம்பே போவ?" போன்ற வசனங்கள் மூலம் கதை ஓட்டத்திற்கு உயிர் கொடுக்கிறார் எழுத்தாளர் (Iraiyuman Sagar, 2017).

கதைக்கு மேலும் வலு சேர்க்கும் பொருட்டு, காதலனை மறக்க காதலிக்கு செய்வினை வைப்பதாக செய்வினை கதை ஒன்றினை அத்தோடு இணைத்துள்ளார் இரையுமன் சாகர். "வீட்டினுள் பாத்திரங்கள் நடுவில் பறந்து நின்றன. எல்லோரும் ஆச்சிரியத்தில் வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தனர். சாப்பாட்டுத் தட்டிலுள்ள சாதம் மனிதக் கழிவாகக் கிடந்தது". குமுதம் நிருபர் விசயகுமார் வந்ததும், காவல் ஆய்வாளர் அதனை நேரில் பார்த்து சாட்சியாக மாறியதும் கேள்விக்குறியை உருவாக்குகிறது (Iraiyuman Sagar, 2017).

சென்னை கடற்கரை: (சென்னை தொடர்வண்டி நிலையத்தில் ஓர் இளைஞனின் ஒருநாள் அனுபவமே இக்கதை.) நீதிமன்றத்தில் குறைந்த தண்டனைக்குரிய வழக்கு இவைகள்தான். 75 வழக்கு என்பார்கள். நீதிபதி எது கேட்டாலும் சரி என்று சொல்ல வேண்டும். இல்லை என்றால் வழக்கை தொடர்ந்து நடத்த வேண்டியதாகி விடும். அதனால் வழக்கிற்கான செலவும் அதிகம். நாளும் விரயம் ஆகும். இருசக்கர வாகனத்தைப் பிடித்து வழக்குப் போடுவது போல்தான். இதுவரை சிறுசிறு வழக்குகளுக்கு நீதிமன்றம் செல்லாதவர்களுக்கு இக்கதை ஒரு பாடமாக இருக்கும். கல்லூரிகளில் உள்ள பாடத்திட்டத்தில் வைக்க வேண்டிய கதைகளில் ஒன்று.

பேர்சியா: (வெளிநாட்டு மோகத்தால் வெளிநாடு செல்லும் ஒருவர் அங்கு அனுபவிக்கும் கஷ்டம் தான் இக்கதை.) எலக்டிரிக்கல் வேலை நன்றாக தெரிந்தவன் முத்தப்பன். முற்றத்து முல்லைக்கு மணம் இல்லை என்றார் போல் ஒயரிங் வேலை முழுவதையும் வடக்கே உள்ளவர்களுக்கு மக்கள் கொடுத்து கொண்டு இருந்தால் குடும்பத்தைச் கவனிக்க வேண்டி எலக்டிரிக்கல் வேலையை விட்டு விட்டு மீன்பிடி தொழிலுக்குச் சென்று கொண்டிருந்த முத்தப்பன் மீண்டும் கரை வேலையை விரும்பி வெளிநாடு சென்று அங்கு சந்திக்கும் பிரச்சனைகளை வெளிநாட்டு மோகத்தால் இருக்கும் மக்களுக்கு உணர்த்துவது போல் அழுத்தமாக எடுத்துரைக்கிறார் எழுத்தாளர்.

## கதை பின்னணி காட்டும் நெய்தல் நில மக்களின் வாழ்வியல் கூறுகளும் பரிந்துரைகளும்

இந்த இரு நெய்தல் எழுத்தாளர்களின் நூல்கள் நெய்தல் நில மக்களின் வாழ்க்கை பொருண்மைகளைப் பிரதிபலிக்கின்றன. சப்திகாவின் நாவலில் தொனிக்கிற வரதட்சணை, மந்திரவாதம், இரையுமன் சாகரின் சிறுகதை தொகுப்பிலும் தொனிக்கிறது. நெய்தல் நில மாந்தர்களிடம் அதிகம் வரதட்சணை வாங்குவது சமூக கவுரமாக பார்க்கப்படுவதும், மந்திர வாதத்தால் எதையும் சாதிக்காலம் என்ற மனப்போக்கும் மேலேங்கி இருப்பதை இரு நாவல் ஆசிரியர்களும் அழுத்தமாக பதிவு செய்கிறார்கள். ஆடம்பர வாழ்வுக்கும் கடன் பிரச்சனைகளுக்கும் நெய்தல் நிலத்தில் பஞ்சமே இல்லை என்பது இரு நாவல்களிலும் உரக்கப் பேசப்படுகிறது.

சீட்டுப் போடுதல் மற்றும் போதை பழக்கம் போன்ற விடையங்கள் குறித்து இம்மக்களிடம் போதிய விழிப்புணர்வு ஏற்படவில்லை என்கிறதையே காட்டுகிறது.அது சட்டத்திற்குப் புறம்பானது என்கிற எண்ணம் மீனவ மக்களிடத்தில் இல்லை. மேற்படி செயல்கள் சமூகத்திலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்கிற செயல்பாடும் அவர்களிடம் இல்லை.இவர்கள் மத்தியில் காணக்கிடைக்கிற அன்பியங்கள், பங்குப் பேரவைகள், பக்த சபைகள் போன்ற இயக்கங்கள் இதுகுறித்து பேச அஞ்சுகின்றன.

கெரவங் கெட்டவ கதையில் "அந்த கொம்ப ஒரு கெரவங் கெட்டவ. மொதல்ல கெட்டுனவனும் சத்துப் போனான். இப்பம் இது ரண்டாம் கெட்டு இவனும் செத்துப் போனான்" என ஜேம்சின் இறப்பிற்கு சொல்லப்பட்ட காரணம் அவரது மனைவியின் இராசி சரியில்லை என்பதுதான். அவனுக்கு வேறு ஒரு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து கொடு என்கிற பேச்சானது பெண்ணின்மீது ஓதப்பட்டு வீசப்படுகிற முட்டையாகவே இருக்கிறது. மீனவர்கள் தொடச்சியாக பலியாகுவது இயற்கை என்றாலும் இறந்த அல்லது காணமல் போன மீனவர்களைத் தேடுவதில் அரசு காட்டும் மொத்தன போக்கும் ஊரில் கடல் அலையால் ஏற்படும் பாதிப்புகளும் நிகழ்வுகளாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

ஆசை என்கிற கதையில் மீனவப் பெண்கள்மீது நடத்தப்படும் அரசு நடத்துனரின் ஏச்சுக்கள் காலங்காலமாக சகித்து வரப்பட்டுள்ளது. மீன் சருவத்தை சவுட்டித் தள்ளும் நடத்துநர்மீது இதுவரையும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கேரளத்தில், மீன் கொண்டு செல்ல தனிப் பேருந்து இயக்கப்படுகிறது. தமிழகத்தில் அந்த வசதி இல்லை என்பது வேதனைக்குரியது. இதில், மீனவப் பெண்ணின் வறுமையும், நியாயமும் தொக்கிக் கிடக்கிறது. அரசு ஆவன செய்திட வேண்டும்.

சொறி என்கிற கதையில் கரைமடி தொழில் செய்யும் மீனவர்களின் துன்பங்களும் குடி பழக்கத்தின் அடிப்படை காரணங்களுள் ஒன்றும் தெளிவுபடுத்தப்படுகிறது. உழைப்புக்கு பலன் கிடைக்க

விட்டாலும் குடிக்க பணம் கிடைக்கும் என்ற மன போக்கு மீனவர்களிடையே இருந்து உடனடியாக களையப்பட வேண்டிய ஒன்று. இதுகுறித்த விழிப்புணர்வு தேவை.

மீனவா எழுந்திரு என்கிற கதையில் தன் உரிமைக்காக போராடும் பேராட்ட குணம் கொண்ட இளைஞர்களே தேர்தல் வரும்பொழுது அவர்களின் தேவைக்காக பணம் வாங்கி விட்டு ஒதுங்கும் ஓர் அவலத்தை எழுத்தாளர் அழுத்தமாக பதிவு செய்கிறார். 2017-ல் இக்கதையில் எழுத்தாளர் குறிப்பிட்டுள்ள எடப்பாடு சாலை தற்போது வரை சரிசெய்யப்படவில்லை என்பது வேதனைக்குரிய உண்மை. மீனவர்களின் குறைகளை சட்டமன்றத்தில் ஒலிக்கச் செய்திடஒரு மீனவ வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்கிற முழக்கம் இன்னும் ஓசையாகத்தான் உள்ளதே தவிர நடைமுறைக்கு வரவில்லை. மீனவர்களுக்கு தனித் தொகுதி ஒதுக்கப்பட வேண்டும்.

சுமை கதையில் தாயை வீட்டு வேலை செய்ய வைத்துவீட்டில் ஒரு வேலைகாரியாய்... இல்லை, இல்லை, சம்பளமில்லா அடிமையாய்... வேலை வாங்குவது பல வீடுகளில் நடக்கிறது. அந்த நிலை மாறவேண்டும். அதற்கு சிறப்புச் சட்டம் அரசு இயற்றிட வேண்டும். அவர்களின் குறைகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும்.

வெளம்பரம் கதையில் வறுமையின் காரணமாக திருமணம் செய்யமால் இருக்கும் பெண் திருமணத்திற்கு சம்மதித்து திருமணம் நடைபெற இருக்கும் நேரத்தில் கடன் காரர்களால் சந்திக்கும் பிரச்சனைகள் சப்திகாவின் விடியலின் வெளிச்சம் நாவலில் கடன் வாங்கி திருமணம் செய்தால் வந்த பிரச்சனைகளை நினைவு படுத்துகின்றது. பெண்கள் முதிர் கன்னிகளாக மாறமால் இருக்க அதிக கடன் வாங்கி திருமணம் செய்யும் போக்கு கடலோரச் சமுதாயங்களில் பரவலாக காணப்படுகிறது. இது குறித்தும் சிறந்ததொரு விழிப்புணர்வு கடலோர மக்களுக்குத் தேவை.

காரக்கொழம்பு கதையில் மாதா, அந்தோனியாரு, லூசியம்ம, இயேசு என பலப் புகைப்படங்கள் இருப்பது குறித்துப் பேசப்படுகிறது. செபம் செய்ய ஒரு தெய்வம் போதுமானது. ஆனால், ஒவ்வொரு படமும் ஒவ்வொருத்தரோட வேண்டுதலுக்கு அடையாளமா இருக்கிறது. வாழ்க்கையில் அவரவருக்குத் தேவையான விருப்பத் தெய்வத்தை வைத்துக் கொள்வதுகூட ஒரு திருப்தியும், மனநிறைவும்தான் என்பதை இரையுமன் சாகர் தத்துவமாக்கி இருக்கிறார். யாரும் தைரியமாக சென்னைக்கு வரலாம் என்ற நம்பிக்கை அளிக்க நெய்தல் இன இளைஞர்கள் தங்கள் ஊருக்களுக்குகென்று ஓர் அறை அமைத்திருப்பது பாராட்டுக்குரியது.
வேளாப் பாடு சொல்கிற செய்வினை கதையில் மூடநம்பிக்கைச் செய்திகள் இன்னும் சமூகத்தில் நிலவி வருவது அழுத்தமாக பதிவு செய்யப்படுகிறது. இவை குறித்த விழிப்புணர்வைக் கட்டாயம் மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

சென்னை கடற்கரை கதையில் நீதிபதி எது கேட்டாலும் சரி என்று சொல்ல வேண்டும். இல்லையென்றால் வழக்கை தொடர்ந்து நடத்த வேண்டியதாகி விடும். அதனால் வழக்கிற்கான செலவும் அதிகம் என நீதிமன்றத்தில் பொய் சொல்ல வைக்கிற காவல்துறையின் தந்திரங்கள் இங்கு கையாளப்பட்டுள்ளது. காவல் துறையினருக்கு போதிய விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டும் என்பதையே இக்கதை காட்டுகிறது.

பேர்சியா கதையில் வெளிநாட்டில் பட்ட துன்பங்கள் தாய் நாட்டின் மகிமை உணர்த்த தாயகத்திற்கே திரும்பி வந்து தன் தொழிலை மகிழ்வோடு செய்த முத்தப்பன் சமகால இளைஞர்களுக்கு ஓர் வாழ்க்கைப் பாடம்.

## முடிவுரை

குமரி மாவட்ட நெய்தல் நில மாந்தர்கள். அழகழகான குடியிருப்புகளையும் வளமான வாழ்க்கையையும் இயல்பாகவே பெற்றுள்ளனர். பெரும்பாலான மக்கள் வெளிநாடுகளில் வேலை பார்ப்பது இவர்களின் வளமான வாழ்க்கைக்கு ஒரு காரணம். என்றாலும் இயற்கையாகவே குமரி மாவட்டத்தில் மீன்வளம் அதிகமாகயிருப்பதும், மீன்வரத்து குறைவான காலங்களில் வெளிமாவட்டங்கள் மற்றும் வெளிமாநிலங்களுக்குச் சென்று மீன்பிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள்

என்பதாலும் பொருளாதாரத்தில் பெரும்பாலும் தன்னிறைவு பெற்றவர்களாகவே காணப்படுகிறார்கள். ஆடம்பர வாழ்வும் போதிய விழிப்புணர்வு இல்லாமையும் பல்வேறு பிரச்சனைகளுக்கு அடித்தளமாக அமைவதையே இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றன. குமரிமாவட்ட நெய்தல் நில மக்கள் பெரும்பாலானோர் கத்தோலிக்க திருச்சபையைச் சார்ந்தவர்கள். சீர்திருத்த சபைகளுக்குச் செல்கின்ற கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த நெருக்கடிகள் தரப்படுகின்றன அவர்கள் கடலில் மீன் பிடிக்கவே தடைகள் உள்ளன. ஊர் மக்கள் சார்பாக இயங்கும் பங்குப்பேரவை எடுக்கும் முடிவுகளுக்கு எதிராக நீதிமன்றம் செல்லக் கூடாது என்கின்ற விதிமுறைகள் கட்டப்பஞ்சாயத்தின் மறுஉருவாக உள்ளது. ஆய்வு நூற்கள் வெளிப்படுத்தும் மனநிலையையே வினாநிரல் மதிப்பீடும் வெளிப்படுத்துவதால் குமரிமாவட்ட நெய்தல் நில மாந்தர்களுக்கு நல்ல மதிப்பீடும் தலைமைத்துவமும் கொண்ட வழிகாட்டிகள் தேவை. சமுதாயம் காவல்துறை மற்றும் சட்டத்துறை குறித்த விழிப்புணர்வு தேவை. பெரும்பாலான படித்த இளைஞர்கள் போட்டித் தேர்வுகள் குறித்த விழிப்புணர்வு அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கே முதல் முக்கியதுவம் அளிக்கின்றனர். முறையான விழிப்புணர்வும், வழிகாட்டுதல் பயிற்சியும் அளித்தால் ஆளுமை திறன்மிக்க பல இளைஞர்களை இச்சமூகம் பெறும். இம்மக்கள் மீது அரசு தனிக்கவனம் செலுத்த தமிழக அரசியலில் ஒரு தனித் தெகுதியும் தேவை.

## References

Iraiyuman Sagar, (2017) Velaap Paadu, Vareethiah Konstantine, Poothurai, India.

Ramanathan Aaru, (1986) Nattupuraviyal Aaivukal, Manickavasagar Pathippagam, Chidambaram, India.

Sapthika, (2019) Vidiyalin Velicham, Nethalveli, Nagercoil, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License